**பேராதனைப் பல்கலைக்கழகம்**

**தொலை தொடர்க்கல்வி நிலையம்**

முதலாம் வருட (மட்டம் 100) கலைமாணி பரீட்சை
(வெளிவாரி – புதிய பாடத்திட்டம்) – ஏப்ரல் 2017

பௌதீக புவியியல் GGYE 102

இவ்வினாப்பத்திரம் மொத்தமாக எட்டு **(08)** வினாக்களை கொண்டுள்ளது.
ஏதாவது நான்கு **(04)** வினாக்களுக்கு விடையளிக்க.
காலம் : மூன்று ((03) மணித்தியாலம்

1. அ. பௌதீக புவியியலின் நோக்கத்தினை விளக்குக. (10 புள்ளிகள்)
   ஆ. மனித சூழல் தொடர்பினை அறிந்துக்கொள்வதற்கு பௌதீக புவியியல் அறிவு எவ்வாறு பங்களிப்பு செய்கிறது என்பதை கலந்துரையாடுக. (15 புள்ளிகள்)

2. அ. புவியின் உட்கட்டமைப்பினை பொருத்தமான விளக்கப்படங்களுடன் விளக்குக. (10 புள்ளிகள்)
   ஆ. உயிர்மண்டலத்தின் இருப்பிற்கு பாறைமண்டலம், வளிமண்டலம் மற்றும் நீர் மண்டலம் என்பவற்றின் முக்கியத்துவத்தினை கலந்துரையாடுக. (15 புள்ளிகள்)

3. அ. 1912 ஆம் ஆண்டு அல்பிரட் வெக்னரால் அறிமுகப்படுத்தப்பட்ட கண்ட நகர்வு கொள்கையினை பொருத்தமான விளக்கப்படங்களுடன் விளக்குக. (15 புள்ளிகள்)
   ஆ. அல்பிரட் வெக்னரின் கண்ட நகர்வு கொள்கையானது ஏன் ஏனைய முதன்மை விஞ்ஞானிகளால் விமர்சிக்கப்பட்டது என்பதை விளக்குக. (10 புள்ளிகள்)

4. பாலைவன பகுதிகளில் இடம்பெறும் காற்றின் தின்னல் மற்றும் படிதல் நிலவுருவங்களை அதன் உருவாக்க செயற்பாடுகளை குறிப்பிட்டு பொருத்தமான குறியீட்டு விளக்கப்படங்களின் உதவியுடன் விபரிக்க. (25 புள்ளிகள்)

5. அ. வளிமண்டலத்தினை வரையறுத்து அதன் சேர்க்கையினை சுருக்கமாக கலந்துரையாடுக. (10 புள்ளிகள்)
   ஆ. வளிமண்டல படைகளின் பிரதான அம்சங்களை விளக்குவதுடன் மனிதனுக்கு வளிமண்டலத்தின் முக்கியத்துவத்தினை விளக்குக. (15 புள்ளிகள்)

6. அ. மனிதன் மற்றும் அவனது சூழலின்மீது வானிலை மற்றும் காலநிலை எவ்வாறு தாக்கம் செலுத்துகிறது என்பதை விளக்குக. (10 புள்ளிகள்)
   ஆ. உயரம் அதிகரிக்கும்போது வளியின் வெப்பநிலை ஏன் குறைவடைகிறது என்பதை கலந்துரையாடுக. (10 புள்ளிகள்)
   இ. உயரம் அதிகரிக்கும்போது வளிமண்டல அமுக்கம் ஏன் குறைவடைகிறது என்பதை விளக்குக. (05 புள்ளிகள்)

7. அ. வடஅரை மற்றும் தென்னரைக்கோளங்களில் காலநிலை பருவங்கள் எப்படி மாற்றமடைகிறது என்பதை விளக்குக. (10 புள்ளிகள்)
   ஆ. "நீரியல் சக்கரமானது புவிமேற்பரப்பின் மீதான நீரின் சேமிப்பு மற்றும் நகர்வினை விளக்குகிறது". மேற்கூறப்பட்ட கூற்றினை பொருத்தமான வரைப்படத்துடன் விளக்குக. (15 புள்ளிகள்)

8. அ. வளிமண்டல பொதுச்சுற்றோட்ட மாதிரியினை வரைவதுடன் இடை அயன ஒருங்கல் வலயத்தின் (ITCZ) முக்கியத்துவத்தினை விளக்குக. (15 புள்ளிகள்)
   ஆ. கொப்பனின் காலநிலை வகையீட்டின் அயன காலநிலைக்குறிய (A) பிரதான பண்புகளை கலந்துரையாடுக. (10 புள்ளிகள்)